# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:** 23 **தேதி** :- 02.03.2014

## கண்டன ஆர்ப்பாட்டம்

### பெரு முதலாளிகளுக்கும் கார்பரேட் நிறுவனங்களுக்கும் பட்ஜெட்டில் சலுகை …

### ஏழை எளிய மக்களுக்கோ பட்ஜெட்டில் சுமை …

அன்பு மிக்க தோழர்களே,

நரேந்திர மோடி அரசு பாராளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்துள்ளது. அதில் இந்திய மற்றும் அந்நிய நாட்டு கார்பரேட் நிறுவனங்களுக்கு சுமார் 5 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதே சமயம் ஏழை எளிய மக்களுக்கான மானியத்தை ரூ 2.60 லட்சம் கோடியிலிருந்து 2.44 லட்சம் கோடி ரூபாயாக குறைத்துள்ளது.

”தொழில் மூலதனத்தை ஈர்த்து உற்பத்தியை பெருக்கிவிட்டால் அதன் பலன் சாமானியர்களுக்கு தானாக கிடைக்கும். அவர்களது வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும்” என்று பட்ஜெட் தாக்கல் செய்த நிதியமைச்சர் அருண் ஜேட்லி குறிப்பிட்டுள்ளார். இந்த கூற்று முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. உதாரணமாக மக்கள் தொகையில் சரிபாதிக்குமேல் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளனர். இந்த பட்ஜெட்டில் சுகாதாரம், குடும்பநலம், கல்விக்கான ஒதுக்கீடு மற்றும் தலித், பழங்குடியினருக்கான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றை பெருமளவுக்கு இந்த பட்ஜெட் குறைத்துவிட்டது.

அதே சமயம் மக்கள் செலுத்தக்கூடிய மறைமுக வரியை ரூ23 ஆயிரம் கோடி அளவிற்கு அதிகரித்துள்ளது. ஆனால் செல்வந்தர்கள் செலுத்தவேண்டிய நேரடி வரியை ரூ. 8,315 கோடி அளவிற்கு குறைத்ததோடு சொத்து வரியையும் ரத்து செய்துள்ளது. கார்பரேட் செலுத்தவேண்டிய வரியை 30 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக குறைத்துள்ளது. கடந்த நிதியாண்டில் (2014-15) நிதி பற்றாக்குறை ரூ 5,89,289 கோடி. ஆனால் கார்பரேட் கம்பெனிகளுக்கும், பன்னாட்டு கம்பெனிகளுக்கும் இந்த நிதிப்பற்றாக்குறையைவிட அதிக அளவில் சலுகைகளை மோடி அரசு அறிவித்துள்ளது.

பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை நடப்பு நிதியாண்டில் 69500 கோடி ரூபாய் அளவிற்கு விற்றுவிட இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்தபோதும் அதன் பலன் மக்களுக்கு கிடைக்காமல் கலால் வரி மூலம் அந்த பலனை மோடி அரசே எடுத்துக்கொண்டது. தற்போது மத்திய அரசு சமர்ப்பித்துள்ள பட்ஜெட்டும், பெட்ரோல், டீசல் விலை உயர்வும் சாதாரண மக்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலே ஆகும்.

**எனவே நமது மத்திய சங்கம்** 03.03.2015 **அன்று நாடு முழுவதும் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்திட அறைகூவல் விடுத்துள்ளது. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்திட வேண்டுகிறோம்.**

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
மாநிலச் செயலர்